

சுதந்திரத் திருநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் (15.8.2024) சென்னை, ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற சுதந்திர திருநாள் வரவேற்பு விழாவில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி அவர்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பொன்னாடை அணிவித்து, புத்தகம் வழங்கி வாழ்த்து தெரிவித்தார். இந்நிகழ்வின்போது, ஆளுநர் அவர்களின் துணைவியார் திருமதி லட்சுமி ரவி, சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (15.08.2024) முகாம் அலுவலகத்தில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் தனது பிறந்த நாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (15.08.2024) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் அவர்கள் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



சுதந்திரதினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் (15.08.2024) நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் சென்னை அடையாறு அனந்தபத்மநாப சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.



சென்னை திருவல்லிக்கேணி, பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில், நேற்று முன்தினம் (15.08.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் சுதந்திரத் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்தில் கலந்துகொண்டார்கள். இந்நிகழ்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, இந்து சமய அறநிலைத்துறை ஆணையர் பி.என்.ஶ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் நிலைக் குழுத் தலைவர் என்.சிற்றரசு, மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், இணை ஆணையர் திருமதி கி. ரேணுகாதேவி, திருக்கோயில் செயல் அலுவலர் / துணை ஆணையர் திருமதி சி. நித்யா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை திருவல்லிக்கேணி, பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில், நேற்று முன்தினம் (15.08.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் சுதந்திரத் திருநாளை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் சமத்துவ விருந்தில் கலந்து கொண்டு ஏழை, எளிய மக்களுக்கு வேட்டி, சேலைகளை வழங்கினார்கள். இந்நிகழ்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, இந்து சமய அறநிலைத்துறை ஆணையர் பி.என்.ஶ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் நிலைக் குழுத் தலைவர் என்.சிற்றரசு, மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், இணை ஆணையர் திருமதி கி. ரேணுகாதேவி, திருக்கோயில் செயல் அலுவலர் /துணை ஆணையர் திருமதி சி. நித்யா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சிறந்த சமூக சேவைக்காக முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது பெற்றவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



இந்திய விடுதலைத் திருநாளை முன்னிட்டு, ‘குறிஞ்சி’ முகாம் இல்ல வளாகத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். உடன் தயாநிதி மாறன் எம்.பி. உள்ளார்.